முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1485

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.10.2023, திங்கட்கிழமை

1. ஞானவேலிகொண்ட அரங்கனே
ஞானவான்கள்தனை படைக்க வந்த தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற வள்ளலே
வாழும் ஞானியே அரங்கனே உந்தனை வாழ்த்தி
2. வாழ்த்தியே சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
ஆசியதும் சோபகிருது துலையின் திங்கள்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 06 ம் நாள், 23.10.2023, திங்கட்கிழமை)
அரங்கனுக்கு பலம் கூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
உண்மைவழி காட்டுகின்ற உயர்ந்த ஞானி
மறைபோற்றும் மாதர்மம் செய்துகொண்டு
மக்களை பசிபிணியில் இருந்து விரட்டி
4. விரட்டியே ஞான வாழ்வு கண்டடைய
விரைந்து சன்மார்க்க நெறி படைத்து
தானதர்மத்தோடு அவர்களை நல்வழி காட்டும்
தவசி நீ தர்மத்தின் காவலன் நீ
5. தர்மபலம் கொண்ட அரங்கன் உன்னால் தான்
தரணியில் அற்புதத்தை நடத்தக்கூடும்
அவனியில் உன்வழி வரும் சீடர்களால்தான்
அகிலத்துக்கே மாற்றம் நிகழக்கூடும்
6. கூடவே ஞானவாழ்வு தந்து
குவலயம் எங்கும் ஞானவான்களை நிரப்பி
ஈடேற்றம் ஞான ஆட்சிக்கு வழிசெய்துவர
இனிதே அரங்கன் அவதாரம் உலகமறிந்தால்

7. இந்த பேருலகம் ஞான லோகமாக
ஞானவான்கள் ஆளுகின்ற ஞானத்தலைமை கொண்ட
ஞான ஆட்சிக்காலமாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–